[illegible — Grantha-script Sanskrit columns]

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press.

ப்³ரஹ்மவித்³யா.

பத்திரீக்ரயம்	
1வருஷ	2—12—0
6மீ	1—8—0
3மீ	0—14—0
1காபி-	0—2—6
இலங்கைக்கு	3—8—0

ப்ரம்மவித்தியா பத்திரிகை

BRAHMAVIDYAPATHRIKA.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

பத்திராதிபத்தைமணியார்டராக வருவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுபுதல்வேண்டும்.

[illegible Grantha line]

௪-மபுத்தகம்] சிதம்பரம்:— ௧௮௮௬ஷ ஜூலைமீ ௰௫ [இலக்கம்- ௧

[illegible — Grantha-script Sanskrit column]

ஆரியாசாரம்.

முன் தொடர்பு.

சந்தியாவந்தன விதி.

ஹோமம், தானம், பிரதிக்கிரகித்தல், போஜனம், ஆசமனீயம், ஜபம் இவைகள் செய்யுங்கால் கைகளிரண்டும் முழங்கால்களுக்குள்ளிருத்தல்வேண்டும். இனிக் கடவுளை வணங்கும் பொழுதும், வலம்வரும்பொழுதும், வழிபடும்பொழுதும், வெள்வெளியிலும், ஆசிரியனைக் கண்டவிடத்தும், ஆன்றோர் சந்நிதியிலும் கழுத்தில் வஸ்திரத்தைச் சுற்றியிருத்தல் கூடாது. ஆசாரியன், பெரியன்பர்கள், திவ்வியாலயங்கள், தண்ணீர், அரசமரம், அக்கினி, சூரியன் இவைகளைப் பின்புறத்தில் நிறுத்தி ஜபஞ்செய்தல்கூடாது. "கொப்புழுக்குக்கீழுள்ள அங்கங்களைத் தீண்டில் தனது கைகளைத் தண்ணீரால் சுத்தி செய்யவேண்டும்; அல்லது வலது செவியைத்தொட்டுக் கடவுளை ஒருவாறு தியானித்தல் வேண்டும்" என்று மனு கூறுகின்றார். தலையிற் பாகை தரித்தும், நிர்வாணியும், தலைமயிர் அவிழ்த்தும், உள்ளங்கலங்கியும், கோட்டுக்கொண்டும், ஊருசை மேலிட்டும், படுத்தும், நடந்தும், பாய்களிலுட்கார்ந்தும், பாதுகை தரித்தும், வாகனமேறியும், கால்களை நீட்டியும், உயர்ந்தாசனத்தில் வீற்றிருந்தும், இருளடர்ந்தவிடமிருந்தும், விசாலமானவிடத்திலுட்கார்ந்தும், தெருவில் நின்றும் ஜபஞ்செய்தல் கூடாது. கைமூடாதும், தலையை மூடியுஞ்செபித்தல் குற்றத்திற்கிடமாம். ஜபகாலத்தில் நகைத்தல் கூடாது. பக்கங்களிற் பார்க்கலாகாது. காலையில் தனது நாசிக்கு எதிரிலும், பகலில் தோள்களுக்கு எதிரிலும், மாலையில் கொப்புழுக்கு எதிரிலும் கைகளை வைத்து ஜபித்தல்வேண்டும். ஜபகாலத்தில் மந்திரங்களின் பொருளை நினைத்துவர

[illegible]

வேண்டும். காயத்திரி மந்திரத்தைப் பாதத்துடன் பாதம் சேர்க்காது ஜபித்தால் அது பெருங் குற்றத்திற்கிடமாகுமென்றும், அதைப் பிரித்து ஜபஞ்செய்யின் பாபங்களை விலக்குமென்றும் ஆன்றோர் கூறுதலால், பாதம் பாதமாகப்பிரித்தே ஜபஞ்செய்தல் வேண்டும். விசுவாமித்திரர் கூறுவதாவது:—"மூன்று வேதங்களையும் ஏனைய எவ்விதக் கருமங்களைய படிக்காது ஒழியினும் காயத்திரி மகாமந்திரத்தை விடாது ஜபிக்கும் ஓர் அந்தணன் வேதியர் திலகனுவன்" என்பது. ஜபத்தின் இறுதியில் பிராணுயாமஞ்செய்தல்வேண்டும். "ஜபத்திற்கு முன்னும் பின்னும் மும்மூன்று பிராணுயாமங்கள் செய்யவேண்டு" மென்று ஸாமதீபிகை என்னும் நூல் அறைகின்றது. "உத்தமே" என்றற்றொடக்கத்தினையுடைய மந்திரத்தால்காயத்திரியை யதாஸ்தானத்திலனுப்பித் தத்தம் சாகைகளில் விதிக்கப்பட்ட மந்திரங்களால் உபஸ்தானஞ்செய்தல் வேண்டும். ஸ்மிருத்தியர்த்தசாரமென்பதில் வணங்கும் வழி இத்தன்மைத்தெனவெடுத்துப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "தமது இருசெவிகளை விருகைகளால தொட்டுப் பிறகு முழங்கால்கள் முதல் கால் பெருவிரல்காறும் மிருதுவாகத் துடைத்துக் காயத்திரி திசைகள், சந்தியாதேவி, பெற்றோர், மற்றைய பெரியோர், சிஷ்டர்கள் இவர்களை வணங்கவேண்டுமென்று. "தமது ஆடை நனைந்திருப்பின் தண்ணீரிற்றனே நின்று ஜபஞ்செய்தல்வேண்டும். தர்ப்பணம், ஆசமனீயம், ஜபம் இவைகளை நின்றுகொண்டே செய்தல்வேண்டும். பிரதக்ஷணஞ்செய்தல் கூடாது" என்று. அரிதர் மொழிகின்றார். தாமறிந்தும் அறியாமலும் நேரிடும் பற்பல குற்றங்களுக்குக் கடவுளது திருநாமமே ஓர் பெரிய பிராயச்சித்தம். ஆதலாற்றான் ஜாபாலி "கடவுளது திருநாமமே ஜபிக்கற்பாலது, படிக்கற்பாலது, அந்நாமமே யாமடையும் பயன் அளவிறந்தது" என்றார். காத்தியாயன மாமுனியும் "சுருதிகளிலும், ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும் கடவுளது திருநாமமே குற்றங்களுக்குக் கடுந்தீ எனவும் அறிந்தறியாக் குற்றங்களுக்கு அதுவே பிராயச்சித்தமெனவும் துணிபப்பட்டுள்ளது" என்றார். ஜபம் என்பது இருமைப்பயனையுந்தரத்தக்கது. இம்மையில் பிசாசமுதலிய பிணிகளை நீக்குதலாலும், மறுமையிற் பாபங்களை யொழித்துப் பரமசுகங்களைப் பயக்குவதாலு மென்றறிக. ஜபத்தால் தேவதைகள் புகழின் அக்கடவுளர் எம்மிடந் திருவளம்பற்றவராது திருவருளால் கருதிய பயனைப்பெறுவோம். யக்ஷர், அரக்கர், பிசாசமுதலிய பிணிகளை விலக்குவோம். எவ்விதப் பிணிகளும் ஜபதத்பரராகிய எம்மிடமணுகாதொழிவனவே" என்று அரிதர் சாற்றுகின்றார். மனு கூறுவதாவது:—"விதியக்கியத்திலும் ஜபயக்கியம் பதின்மடங்கு அதிகம் என்பது. அவரே மற்றோரிடம் "ஜபத்தாற்றான் சித்திபெறுவான்" என்று தொடக்கி "எக்கருமங்களைச் செய்யினும் செய்யாவிடினும் இவ்வொன்றே அந்தணர்களுக்குச் சித்தியளிக்கு" மென்றார். கீதாசாத்திரத்திலும் யக்கியங்களுக்குள் ஜப யக்கியந்தான் என்று கடவுளது திருவாக்கமைந்திருக்கின்றது. "முமுக்ஷுக்களுக்கு நாராயணுஷ்டாக்ஷரம் ஜபிக்கவேண்டுமென்று தாரசாரோபநிடதங் கூறுகின்றது. அங்கு ஓம் நமோ நாராயணுய என்ற இத்தாரகத்தை யுபாசித்தல் வேண்டும்" என்றிருக்கின்றது. நாராயணேபநிடதத்தில் அதனுல் யாம் பெறும் பெரும் பேற்றைப்பற்றி எடுத்தோதப்பட்டிருக்கின்றது. "ஆயுள் பெறுவான், பிரஜாபதித்தன்மையடைவான், ஐசுவரியத்தைப்

[illegible]

ப்பெறுவான், முக்திசுகமெய்துவான்" என்று. சிவோபாசகர்களாயுள்ளவர்களுக்கு ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபஞ்செய்யவேண்டுமெனப் பல சுருதி ஸ்மிருதி புராணங்கள் பறையறைகின்றன. சாதாதபர் "சபகம், நமகம் இவைகளை ஜபிப்பவனை நமது கருணைபால் கண்ணுதலார் ஆட்கொள்வார்" என்றார். சௌனகர் "வேதங்களிற் பற்பல பெரு மந்திரங்களிருப்பினும் அவைகள் அந்தியாத்துமவரும் பொருளை விளக்கினும் புருஷசூக்தத்தினும் மேம்பாடுடைய மந்திரம் வேறில்லை. இம்மந்திரம் பிராயச்சித்தங்களிலும், கடவுள் வழிபாடுகளிலும், மோக்ஷார்த்த ஜபத்திலும், வசியத்திலும், அக்கினியுபஸ்தானத்திலும், புத்திரப்பேறு பெறுதலிலும், மற்றெவ்விதக் கன்மங்களின் பயன் கிடைக்கவேண்டினதிலும், ரோகநிவர்த்தியிலும், காலன்வெற்றியிலும் மற்றும் அனேக விஷயங்களில் முனிகளால் விநியோகிக்கப்படுகின்றது என்றார். இனிக் கிரகஸ்தர்கள் ஔபாசனஞ் செய்வதைக்குறித்துரைப்பாம். "விவாகஞ் செய்த பிறகு ஓர் இமைப்பொழுதேனும் அக்கினியின்றி யிருத்தல் கூடா" தென்று கர்காசாரியர் கூறுகிறார். பிரமசாரியனுயுள்ளவன் சமிதாதானஞ் செய்தல்வேண்டும். ஔபாசனத்தின் பின்னர் ப்ரம்மயக்கியம்செய்தல்வேண்டும். "பைடீநஸி" எனபவர் மொழிவதாவது:—"தத்தம் சாகைகளை அத்தியயனஞ்செய்தலே ப்ரம்மயக்கியமெனப்படும். அதனைச் செய்பவர் பிரமலோகத்தைப் பெறுவார்" என்றார். வேதாத்தியயனஞ் செய்யாதவர் ப்ரம்மயக்கியத்திற்குப் பதிலாகக் காயத்திரியைச் செபித்தல்வேண்டும். மனு "நித்திய விதிகளைச்செய்து தண்ணீர்க்கரையில் அல்லது கானகத்திற்சென்று காயத்திரியை ஜபித்தல்வேண்டு" மென்றுரைத்திட்டார். சங்கிரகமென்னுங் கிரந்தத்தில் "பிரமயக்கியத்தில் மாலையில் நியமித்துப் புருஷசூக்தத்தை ஜபிப்பவன் சர்வவேதபாராயண பலத்தைப் பெறுவான்" என்றிருக்கின்றது. இனிக் காண்டரிஷிகளையும் நான்கு வேதங்களையும் இதிகாச புராணங்களையும் தேவரிஷி பிதுருக்களையுமுபாசித்துத் தர்ப்பணஞ் செய்வதைப் பற்றிக்கூறுவாம். ஆற்றலற்றவனுக்குத் தர்ப்பண விதியைக்குறித்துக் காத்தியாயனர் சுருக்கி விதித்திருக்கின்றார். பிதுர்வம்சத்தினரும், மாதுர்வம்சத்தினரும் எம்மிடம் தர்ப்பண உதகத்தை எதிர்பார்க்கும் மற்றவரும் இவ்வுலகத்தைக் கொள்வாராக" வென்றும் மாதவீயத்தில் "ப்ரம்மஸ்தம்பம் வரையிலுள்ள பிராணிகள் திருப்தி எய்துக என்றுச்சரித்து மூன்று முறை தண்ணீரை எடுத்து விடுவானுக" என்று சங்கிரகதர்ப்பணம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இடதுகைப் பெருவிரலடியில் திலங்களை வைத்து மற்றைப் பெருவிரல்களாலெடுத்துத் தர்ப்பணஞ் செய்தல்வேண்டும். பெருவிரல் சுட்டுவிரல் இவ்விரண்டு விரல்களினுலும் திலத்தை எடுத்துத் தர்ப்பணஞ் செய்தல் கூடாது. ஞாயிறு, வெள்ளி, திரயோதசி, அஷ்டமி, ஜன்மானுஜன்ம நக்ஷத்திரங்கள் இவை கூடியகாலத்தில் திலங்களும் அக்ஷதைகளும் கலந்து தர்ப்பணஞ்செய்தல்வேண்டும்.

இனிக் கடவுள் வழிபாட்டை எடுத்துரைப்பாம். அஃது சுருதி, ஸ்மிருதி, கிருஹ்ய சூத்திரம், புராணமுதலியவற்றால் விதிக்கப்பட்டது. ருக்குவேதத்தில் "வ...வ...ம" என்று தொடங்கிய மந்திரம் அவ்வழிபாட்டை விதிக்கின்றது. "ஸ்மிருதிசந்திரிகை" என்னுமோர் நூல் "தத்தஞ்சாகைகளுக்குரிய கிரியைகளை முடித்தும், அக்கினிஹோத்திரஞ்செய்தும், திருவாழிக்கையனுய திருமாலினது வழிபாட்டைச் செய்யவே

[illegible]

ண்டு" மென்றெடுத்துரைக்கின்றது. "பிறகு தேவர்களை நமஸ்கரித்துத் தன தில்லத்திற் புகுந்து விதிவழுவாது புருஷசூக்தமந்திரங்களால் கண்ணனை வழிபடுவானாக" என்று ஹாரிதமுனி சாற்றுகின்றார். வைகாநசக்கிரியத்தில் "அக்கினியில் நித்திய ஹோமம் முடித்து மறைமுறை மாறாது மாலை வழிபட்டால் ஏனைய கடவுளர் எல்லோரும் அர்ச்சிக்கப்பட்டவராவர்" என்று தொடங்கி "மற்றைய எக்கன்மங்கள் குறைவை யெய்தினும் அக்குற்றங்களை விலகக்கருதி அகிலாந்தரியாமியாகிய நாராயணனை அர்ச்சித்தல் வேண்டும். ஆயினும் விஷ்ணுவினது பரமபதத்தைப்பெறுவானென்பது மறைகளின் முடிவு" என்று இறுதிபெற்ற வசனங்களால் வெளியாகின்றது. போதாயனரும் "கடவுளர் பூஜையை எடுத்தோதுவாம். [illegible]" என்று தொடங்கும் மந்திரங்களால் தத்தங்கொண்ட ஆன்மலிங்கங்களுக்கேற்ப ஆசனம், பாத்தியம், அர்க்கியம், ஆசமனீய முதலியவற்றை எடுத்தோதுவித்தல் வேண்டும்" என்று தொடங்கி நாராயணன் பரமசிவம் இருமூர்த்திகளுக்கும் ஒரே பூஜையை விதித்தார். சௌனகர் "விநாயகன், ஆதித்தன், சக்தி, திருமால், பரமேசுரன் இவ்வைம்மூர்த்திகளையும் நாடோறும் வழிபடுவார்கள்" என்றார். மாபாரதத்தில் "பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் தீக்ஷைகளைபெற்ற சூத்திரர் இவர்களால் அன்புடன் ஆராதிக்கப்படுபவன் பத்மநாபனென்றார். சௌனகர் "காலையில் விதிவழுவாது நீராடி மனச்சுத்தி எய்திப் பரமேசுரனது சந்நிதானத்திலுட்கார்ந்து வழிபாட்டைத் தொடங்குவானாக" என்றுரைத்தார். அபரார்க்கமென்னும் நூலில் "அஷ்டாக்ஷரமென்னும் மஹாமந்திரத்தால் திருமாலைப் பூஜைசெய்வானாக" என்றெடுத்தோதப்பட்டது. வியாசாசாரியர் "[illegible]" என்னும் மந்திரத்தாலும் புருஷசூக்தத்தாலும் ஆதிநடுவந்திலாச் சோதியாகிய அரியை அர்ச்சித்தல்வேண்டு மென்றார். பௌத்சல்லியர் "வில்வ பத்திரத்தாற் கோவிந்தனை ஒருவாறு அர்ச்சிப்பவன் உத்தமலோகங்களிலவனுடன் இகழ்வான். நற்றுளசிகளாற் கடவுளின் பிம்பத்தை அர்ச்சிப்பவன் பெரும்பேறைப் பெறுவான். சாளக்கிராமத்தில் ஓர் துளசியை இட்டவன் ஏகாதசியிலுபவாசஞ் செய்தவனைப்போல் இருவினைப்பயனை யொழித்திடுவான். பாத்திரங்களில் அந்தணரைப்போன்ற பாத்திரமும், கோதானத்தைப்போன்ற தானமும் கங்கைக்குச் சமானம்போன்ற தீர்த்தமும், துளசிக்குச் சமானமான பத்திரமும் உலகத்திலில்லை. அன்புடன் கொடுத்தது பலம பத்திர புஷ்பம், புல், தண்ணீரேனும் அதைக்கேசவன் ஏற்றுக்கொள்வான்" என்று சொல்லுகின்றார். பாத்மபுராணத்தில் நல்ல ஹவிஸ்ஸையும் மற்றை எந்த நைவேத்தியத்தையும் தேவனுக்குக் கொடுக்கவேண்டும். நைவேத்தியங் கிடைக்காவிடம் பழங்களேனும், அவைகளும் கிட்டாவிடத்துப் புல் பூண்டுகளேனும், அதுவுங் கிட்டாவிடத்துத் தண்ணீரேனும் நிவேதனஞ் செய்யவேண்டியது. மோகத்தினாலாவது, சோம்பலினாலாவது தேவதார்ச்சனம் செய்யாதவர்கள் கடோமாகிய நரகத்தையும், பறவைகள் முதலியவைகளின் ஜன்மத்தையுமடைவார்கள். எவர்கள் களங்கமற்ற மனத்தால் விட்டுணுவைப் பூஜிக்கிறார்களோ அவர்களுக்கு மீண்

[illegible]

டும ஜனனமில்லை. சாண்டில்லியர் கூறுவதாவது:—"பூஜாகாலத்தில ஹங்காரமில்லாமலும், பேசாமலும் மௌனமாக விட்டுணுவை அர்ச்சிக்கவேண்டு" மென்றது. பூஜைக்கு வேண்டிய உபகரணங்கள் அகப்படாவிடத்து மனத்தினாலேயாவது தியானித்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்கிறவர்களுக்குத் திருமால் எல்லாவற்றையும் அனுக்கிரகிப்பர். விஷ்ணுபூஜை செய்யாதவர்களின் தானம் ஹோமம், தபசு இவைகள் பிரேதத்திற்குச் செய்த அலங்காரம்போல்வாளாமையும். வேற்றுமைப்படாத ஒரே குடும்பத்திலிருக்கும் சகோதரர்களுக்குக் கடவுள் வழிபாடொன்றே. அதாவது ஒருவனே செய்தாற் போதியது. சங்கிரகமென்னும் புத்தகத்தில் ஓர் சமையற் சோற்றைக்கொண்டு பிழைக்கும் குடும்பத்தினர்களுக்குப் பிதிர்க்கள், தேவதைகள், பிராமணர்கள் இவர்களின் பூஜை ஒன்றே போதுமானது. வேற்றுமைப்படின் அவர்களுக்கு வீடுதோறும் வெவ்வேறாகவே செய்தல் வேண்டும். "வஸ்திரம், அலங்காரம், தைலமுதலியவற்றைப் பொருட்கள், மருந்து இவைகளைக் கடவுளுக்கு அர்ப்பித்தே யுட்கொள்ளலவேண்டும்" என்று சாண்டில்லிய மகரிஷியினுடைய கருத்து. நாரதர் சாற்றுவதாவது:—"புருஷசூக்தமென்னும் மந்திரத்தால் புஷ்பங்களேனும், மற்றைத் தண்ணீரேனும் கடவுளுக்குக் கொடுத்தால் இதனாலுண்டாகும் பயன் அளவிறந்தது" என்பதே. பூஜைக்குப் பிறகு "[illegible]" என்று தொடங்கிய தோத்திரத்தால் நாடோறுங் கடவுளைத் துதித்து அவரது மலரடி பணிந்து தன்னை அவருக்கு அர்ப்பித்திடுவானாக. வியாசர் கூறியதாவதெனில்:—"விட்டுணுவினது பாததீர்த்தமானது பம்பல பாவங்களை யொழிக்கும் அதே தண்ணீரைத் தலையில் காரணமின்றி வீழ்த்தினால் எண்மடங்கு பாவங்களை விளைவிக்கும். கடவுளது திருவடித் தீர்த்தத்தை யுட்கொண்டு கையைக் கழுவுதல்கூடாது. கழுவினால் அது கொடிய தீவினைக்கிடமாகும்" என்பது. சந்திரிகை என்னும் புத்தகத்தில் உள்ளத்தில் கடவுளது திருமேனியும் முகத்தில் அவரது திருநாமமும் வயிற்றில் அவரது நைவேத்தியமும் சிரசில் அவருக்கு அர்ப்பித்த புஷ்பமும் பாதோதகமும் எவனிடமிருக்குமோ அவனே அச்சுதன். பக்திநசபரிசிஷ்டத்தில் "தேவதைகள், சித்தர்கள், இருடிகள் இவர்களால் விட்டுணு நைவேத்தியம் மிகச்சிறப்புடைத்தென்றும் மற்றைய தேவதைகளுக்களித்த நைவேத்தியம் அங்ஙனமல்லவெனவும், அதையுட்கொள்ளின் சாந்திராயண விரதமனுட்டிக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. வியாசாசாரியர் நித்தியம் ஹரியைப் பூஜித்தபிறகு ஸ்ரீபஞ்சாக்ஷர முதலிய பற்பல மந்திரங்களால் மலபரிபாகியாகிய ஒருவனே கண்ணுதற்பிரானைப் பூஜிக்கவேண்டுமென்றார். சாளக்கிராம முதலிய கற்களின் கடவுளை வழிபடவேண்டுமேயன்றிப் பிரதிமைகளிற் பூஜித்தற்கு விதி எங்குங் காணேம் எனின் "மாபாரதத்தில் அழகிய திருமுகமும் திருக்கண்களுமமைந்த ஓர் பிம்பத்தைத் தமது சக்திக்கியைய அமைத்து அதையர்ச்சிக்கவேண்டும், அதை வணங்கவேண்டும், அதையே தியானிக்கவேண்டும்" என்று பிரதிமாராதனத்தை நேரில் விதித்திருப்பதால் அதைப்பற்றி இந்த விரிவாக வரையவேண்டி

[illegible]

தொன்றுமில்லை. எவ்விதத்திலும் கடவுள் பூஜையினைப் புசித்தல் கூடாது. "ஒவ்வொரு தினத்திற்கும் ஸ்நானம், ஸந்தியை, ஜபம், ஹோமம், கடவுள் வழிபாடு, அதிதிகளைப் பூஜித்தல், வைசுவதேவஞ்செய்தல், ஆகிய ஆறு நித்தியக் கிரியைகள்" என்று பராசரர் முதலிய ஆன்றோர்களால் கடவுள் பூஜை நித்தியமென எடுத்தோதப்பட்டவாறெலன்க. தேவலரென்பவர் கூறுவதாவது:—"தேவர்களுக்கெனவும் அந்தணர்களுக்கெனவும் பாகஞ்செய்யாது தனக்கெனப் பாகஞ்செய்பவன் யாண்டும் பாவியாவான்" என்றார். மனுவும "தேவர்கள், இருடிகள், மானுடர்கள், பிதுர்க்கள், வீட்டிலுள்ள தேவதைகள் இவர்களைப் பூசித்துப் பிறகே இல்லறத்தவன் புசிப்பானக" என்று சாற்றியிருக்கின்றார். சூரியன் உதித்த பிறகு பத்துநாழிகையளவு முற்பகலென்றும் பிறகு பத்துநாழிகை நடுப்பகலென்றும வற்படுகின்றது. அந்நடுப்பகலில் மாத்தியாந்நிகானுட்டானஞ் செய்தல்வேண்டும். பிறகு வைசுவதேவமநுட்டிக்கவேண்டும், அதைத் தத்தஞ் சாகைகளிற் கூறியபடி அநுட்டித்து முடித்தல்வேண்டும். அவ்விதமே ஸ்மிருகளின் கருத்து. "வைசுவதேவஞ்செய்யாது பொதுத்தினங்களில் புசிக்கும அந்தணர் காலசூத்திரமென்னும் நரகத்தைப்பெறுவார்" என்று வசிஷ்டர் அறைகின்றார். பிறகு அதிதியைப் பூசித்தல்வேண்டும். அதிதியினிலக்கணம், தூரத்தினின்று வருதவனும், வைசுவதேவகாலத்தில் நிகழ்ந்தவனும், சுயகிராமத்தவனலலாதவனும் தன்னை முன்னறியாதவனுமெனபதே. "அதிதியும், பிரமசாரியும் பக்குவஞ்செய்த அன்னத்திற்கு உரியவராதலால் அவருக்கு அன்னங்கொடாது புஜித்தல கூடாது" என்று பராசரர் மொழிகின்றார். எங்கு "ஓர் துறவி புசிக்கின்றானோ அங்கு ஹரியே புசிக்கின்றார். எங்கு ஹரி புசிக்கின்றாரோ அங்கு உலகமெலாம் புசிக்கின்றது". என்று கௌதமர் சொல்லுகின்றார். சாதாதபரின அபிப்பிராயம் "எவன் வீட்டிலுட்புகுந்த அதிதி தான் விரும்பியதையடையாது திரும்புவான் அங்கு தம் பாபத்தை யொழித்து அவனது புண்ணியத்தை யடைந்து செல்வான்" என்றார். ஸ்மிருதிரத்தினத்தில் "சூரியோடம் என்னும் அதிதி திரும்பும் பாபம் தன்னில்லத்தினின்று அன்னம்பெறாத அதிதிபகற்காலத்திற் திரும்புவதாலுண்டாகும் பாபத்தினும் எண்மடங்கதிகம்." சூரியோடனென்றால் இரவில் வரும அதிதி. "புல்லும், நிலமும், தண்ணீரும், நல்வார்த்தையும் பெரியோர் வீடுகளில் எக்காலமும் குடிகொண்டிருக்கும்" என்று மனு எடுத்தோதியதின் கருத்து யாதெனில், பெரியோர் புகுந்தவிடம் ஆசனமில்லாவிடில் புல்லும், படுக்கையில்லாவிடத்துப் பூமியும், அர்க்கியபாத்திரங்களில்லாவிடத்துத் தண்ணீரும், அன்னமில்லாவிடத்து நலல வார்த்தையுமென்பது.

மற்றது பின்வரும்.

இலத்தூர்ச் சுந்தரராஜசாஸ்திரிகள்.

பத்ரிகா:-

[illegible]

ஸ்வஸ்தி ஸ்ரீ...

ஸ்ரூயதாம்!

[illegible]

கடிதம்.

—:o:—

கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச்சாரமாட்டா.

சிதம்பரத்தின்கண்ணுலாவும் ப்ரம்மவித்தியா பத்திரிகையினதிபதியிடம்வணக்கத்துடன்செய்துகொள்ளும் விண்ணப்பம்.

1. ஐயா,—தமது பத்திரிகையில் "விக்கிரகாராதனம் வைதிக" மென்பதைப்பற்றிப் பண்டிதர் ஸ்ரீநிவாசாசாரியர் வரைந்த ஓர் உபந்நியாசத்தைக் கண்ணுற்றுக் களித்தேன்.

2. ஆயினும் நாம் ஹிந்து பத்திரிகையிலெழுதிய உபந்நியாசத்தை முற்றிலுமாராயாது ஏதேதோ எம்மிடம் பற்பல போலிக்குற்றங்களைக் கடாவியதின் பொருட்டே எமது மனம் வருந்துகின்றது.

3. சிலர் முதலில் விக்கிரக ஆராதனமானது வேதத்தில் விதிக்கப்பட்டதல்லதென விவாதஞ்செய்து சிலரை இவ்விஷயத்தில் தீர்மானஞ்சொல்ல அவ்விந்து பத்திரிகை வாயிலாகவே அறிய விரும்பினார்கள். மற்றுஞ் சிலர் அவ்விஷயத்தில் ஐயமுற்று உண்மையறியாமல் திகைத்தார்கள். இதையறிந்து யாமும் அவ்விஷயத்தைப்பற்றி வரைய முயன்றோம்.

4. மேற்றிசையார்கொண்ட கொள்கைகளை நிலைநாட்டவும் முதறிஞர்களான நமது முதாதிகள் கொண்ட கொள்கைகளை அவலமாக்கவும் யாம் எட்டுணையேனும் முயன்றோமில்லை என்பது மற்றவரிடம் குற்றங்கூறுங் குணமுடைய மேலோர்க்குச் சொல்லாதே விளங்கும்.

5. மேலும் நீடூழிகாலமாய் ஆங்கிலேயம், ஆந்திரம், கன்னடமுதலிய பத்திரிகைகளிற் பற்பலவிஷயங்களைப்பற்றி எமது அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தது தங்களுக்குத் தெரிந்த விஷயமன்றோ?

6. அவ்விதமே பிம்பார்ச்சனை விஷயத்தில் வேத சம்மதியை எதிர்பார்த்தவொருவர் கொண்டது ஐயமற அவ்விடயத்தில் வேதவாக்கியங்கள் எமது ஆராய்ச்சிக்குக் கிட்டவில்லை என வெளியிட்டோம்.

7. இதுகாறும் யாம் ப்ரம்மவித்தியாவை வாங்கினவனுமல்ல, படித்தவனுமல்ல.

8. ஆயின் சுந்தரராஜ சூரிமுதலியோர் வெளியிட்ட விக்கிரக ஆராதனை விஷயத்தைப் பார்த்தும் மீண்டுங்கண்களைமூடி விக்கிரக ஆராதனம் அவைதிகமென்று யார்மூலாத்ததாக வரைந்தது எவ்விதம் பொருந்தியதெனத் தாமே சிறிதாராய்ந்தயக்கமும் வாதிப்பிரதிவாதிகளாகிய இருவரும் ஒருவர்க்கொரு

[illegible]

வர் சேர்த்து விவாதஞ்செய்வதற்கு முன்னரே மற்றவரை மயக்க எழுத புன்மொழிகளையே யாமெழுதியதென நமதன்பர் வரைந்ததும், ஏழைகள் பதிமயங்க எழுப்பியதெனவே அறிஞர்கள் சிந்தித்து விழியாரோ?

9. "தாம் ஆரியமத பாஷா விசேஷங்களிற் பயிற்சி பெறாத நம்மவரைச் சுட்டி" என்றதற்றொடக்கத்தின் வசனங்களினுட்கருத்து எமக்கு நன்கு புலப்படவில்லையாதலால் அவ்விதம் அவற்றினை எடுத்து விளக்கும்படி நமது நண்பரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

10. "இப்பண்டிதர் சொல்வாரோ" என்று தொடங்கிய சில வாக்கியங்களைக் கண்ணுற்ற எமக்கு அவர் அநேக பிராசீன சரித்திரங்களிலும், சிலாசாசனங்களிலும் பயின்று முதிர்ந்தவரென வெளியாகின்றது.

11. மற்றும் அவர் கருதியது இங்ஙனமிருக்கலாமென எமதபிப்பிராயத்தை வெளியிடவெழுந்த நமதறிஞர் நுண்ணறிவைச் சிறிதாராய்ந்த எமக்குண்டாகிய பெருவியப்பில் எமது மனம் ஆழ்ந்தது.

12. நீடூழிகாலமாய் இந்து பத்திரிகையில் பற்பல அபிப்பிராயங்களை வெளியிட்டுவந்த எம்மை நமது நண்டர் அறிந்திருந்தும் இவ்விஷயத்தை யாம் ஆங்கிலேயபாஷையில் வெளியிட்டது நம் சுதேச பண்டிதர்களை மோசஞ்செய்யவென்றாகித்து எழுதியது எம்மனத்திற்கோர் சித்திரத்தைத் தராதொழியுமோ?

13. விக்கிரக ஆராதன விதாயினி என்று மைசூரில் அச்சிட்டு வெளியிடப்பட்ட புத்தகத்தை முற்றிலும் பாராது யாமெழுதியதிலுள்ள ருக்குவேத சாமவேத வசனங்களை நாமே தோ கற்பித்தெழுதியதாக நம்மவர் எண்ணியது அவ்விதப் புத்தகத்தை யாராயாத குற்றத்தாலென்றே வெளியாகின்றது.

14. நமது நண்பர் பிம்பார்ச்சனத்தில் நாட்டிய பற்றிலும் யாம் அதிகமாகவே சாளக்கிராமம், பகவத்பிரதிமைகள் குருபாதுகை முதலியவற்றைப் பூசித்தலிலும் பற்றையடைந்திருக்கின்றோம். அவ்வித விக்கிரக ஆராதனத்தில் எமக்குச் சற்றும் வெறுப்பில்லை. தந்திர புராணாதிகளான பற்பல நூல்களில் யாம் ஈட்டறவேண்டிப் பற்றுகோடாய்ப் பற்பல ரிஷிகளாற் காட்டப்பட்ட இந்நல்வழியை விடவேனும் விக்கிக்கவேனும் முயன்றோமில்லையென்பதைத்தாங்களறியவேண்டும்.

15. உண்மை இங்ஙனமிருக்க இவ்விஷயத்தைப்பற்றி இந்துபத்திரிகையில் வெளியிட்ட கடிதத்தை முற்றிலும் உற்றுநோக்காது யாமெழுதியதற்கு முறையே குற்றங்கூறாது வீண்பற்றுபெற்ற சிற்றறிஞராகிய மற்றவரை மயக்கப் பற்பல மொழிகளை மொழிந்து நமது நண்பர் முன்வந்தது எம்மிடம் காரணமின்றித் தோன்றிய வெறுப்பாற்றானோ அல்லது எம்மை வென்று பெருமை பெறலாமென்கிற விருப்பத்தாலோ என்பதை இழுக்கற்ற அறிஞர்கள் அறிவார்கள். மற்றதைப்பின் வெளியிடுவாம்.

மொழிபெயர்ப்பு.

ஒப்பம் பாஷியாசாரியார்,

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃.

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—விரோதி-௵ ஆடி௴ ௩௰-௳ திங்கட்கிழமை.

பத்திரிகைகள்.

ஐயா,—நமது பத்திரிகா நண்பர்களனைவரும், நம் பத்திரிகைக்கு மூன்று வருடங்கள் நடந்தேறப்பெற்று நான்காவது ஆண்டு தொடக்கியிருப்பதைக் அறிந்தேயிருப்பார்கள். இவ்வருடத்திலும் ஈசுரன் கருணையாலும், தம்போன்ற தனவான்களின் ஆதரவினாலும் யாதொரு இடையூறுமின்றிப் பெரியோர்கள் ஆசிகூறுவார்களாக. நம்மவர்கள் இயல்பைப் பாருங்கள்! மேற்றிசையார் கொண்ட பெருமைகளெல்லாம் பத்திரிகைகளாற்றானென்பதை இவர்களறிந்திருந்தும் அப்பத்திரிகைகளை யாதரியாது பெரும் மையல்கொண்டிருக்கிறார்கள். நம் தேசத்திலும் ஆரியர்களுக்கு ஐக்கியமும், சுவதந்திரமும், தேசாந்திரச் சரித்திர அறிவும், வியாபாரத்தின் நிலைமையும், இன்னும் அவசியம் அறியவேண்டிய பற்பல விஷயங்களும் பத்திரிகைகளாலறிந்தவர்கள் அநேகர் இருக்கின்றார்களல்லவா? எவ்வளவோ உபகாரம் புரியும் பத்திரிகைகளைமட்டில் இவர்கள் ஆதரிப்பதில்லை. மேற்றிசையிலுள்ள ஒவ்வொரு தேசங்களிலும் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் நடைபெற்றுவருகின்றன. ஆதலாற்றான் அவர்களுள் ஒற்றுமை ஓங்குகின்றது; வாணிபம் விருத்தியாகின்றது; சைந்நியம் செழிக்கின்றது; பொருள் பொங்குகின்றது; கல்வி கிளைக்கின்றது; ஆண்மை அசண்டுவருகின்றது; இவ்விஷயங்களில் உண்மையான காரணம் பத்திரிகைகள்தான் என்றறியாது நம்மவருள் சிலர் இதற்குக் காரணம் வர்ணவேற்றுமை, ஆச்சிரம வேற்றுமை, மதவேற்றுமை முதலியனவென வீணிலவைகளின் தலைமேல் பழிசுமத்திவருகிறார்கள். ஆராயுங்கால், இவ்வேற்றுமைகள் மேற்றிசையில் எவ்வளவு நிலைபெற்றனவோ அவ்வளவு நம் தேயங்களிலில்லையெனவுஞ்சொல்லலாம். ஆதலால் இவைகளெல்லாம் நமது ஒற்றுமைக்குக் காரணமல்ல. மற்று "உலகசரித்திர உண்மையை யறியாது எந்நூல் பயின்றும், எந்நிலைமை யெய்தியும், கிணற்றுத்தவளைபோல் அறிவிலிகள் சங்கத்திலழைக்கப்படுவான்" என்ற முன்னோர் மூதுகூற்றை நம்மவர் கையாடுவதே முக்கியகாரணமெனக்கொள்க. அறிஞர்காள்! நமது சென்னை இராஜதானியின் பிரமாணமுள்ளதும், சற்றேறக்குறைய மூன்றுகோடி பிரஜைகள் குடியேறினதுமான இங்கிலாந்து தேசத்தில் ஏறக்குறைய 3000 பத்திரிகைகள் நடந்தேறிவருவதாகக் கேள்விப்படுகிறோம். நம் தேயத்திலோ அதில் பத்திலொருபங்கு மில்லை. அம்மட்டோ! அவ்விடத்திலுள்ள பத்திரிகைகளுள் நாடோறும் சுழன்றுவரும் பத்திரிகைகளைப்போல் ஒருமணி நேரத்திற்குள் சுழன்றுவரும் பத்திரிகைகளும் இருக்கின்றனவாம். மின்சாரக்கம்பி வாயிலாகப் பற்பல சங்கதிகளைப்பெற்று அவ்வப்பொழுது வெளியிடுகின்றார்களாம். அவைகளைத் தபால் மார்க்கமாக அனுப்புவதில்லை. அவைகளை வண்டியிலேற்றித் தெருக்கடோறுங் கொண்டுபோய் அவைகளைப் பென்னி என்னும் சிறு நாணயத்திற்கு வாங்கிப் படிப்பார்களாம். அப்பத்திரிகையின் நிருபகேயர்கள் பத்திராதிபர்களிடம் வெகு பணம் பெறுகின்

[illegible]

[illegible]

ஶ்ரீ:

[illegible]

ர்களாதலால் யாண்டும் அவர்கள் சும்மாயிரார்கள். விடாது விஷயங்களை விசாரித்து வருகின்றார்கள். இவற்றுள் சுமார் 500 பத்திரிகைகள்வரையில் மதசாஸ்திரங்களைப்பற்றியனவாம். அப்பூமியிலும் நான்மடங்கு பிரஜைகள் குடியேறிய இந்நாட்டில் அவ்வளவு பத்திரிகைகளுமில்லை; அதில் பாதியுமில்லை; மதசம்பந்தமான பத்திரிகைகளுமில்லை. இஃது நம்மவர்க்குக் குற்றமின்மையைக் குணமெனக் கோடலுமுடைத்திலதே! பாருங்கள்! ஆரியர்கள் மதத்தையும், சாஸ்திரத்தையும் போதிக்கும் பத்திரிகைகள் பல இலதேனும் கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த பற்பல பத்திரிகைகள் ஆங்கிலேய பாஷையிலும் மற்றைய தேசபாஷைகளிலும் வெளிவந்துலாவுகின்றன; மனத்தைக் கலக்குகின்றன; நம்மவரை மயக்குகின்றன; நல்லொழுக்கங்களை யொழிக்கின்றன; இதினும் அதிக வெட்கத்தாத்தக்கது யாதுளது?

நம் இராஜதானியில் ஆரியமதப் பத்திரிகைகளொன்றமில்லாவிடினும் கிறிஸ்துவமதத்தைப் போதிக்கும் பத்திரிகைகள் சுமார் 20-வரையில் நீடித்தகாலமாக நிலைபெற்றுவருகின்றன. ஏதோ நாம் செய்தபெருந்தவத்தால் நம்மவர்களுக்கு நாத்திகமென்னும் பெரும் வாதத்தைப் பயப்பித்த “தத்துவவிவேசினி” தலைசாய்ந்தது. ஆயினும் நம்முள்ளத்திற்றோன்றிய கருத்தை வெளியிடாமலிருத்தலும், நற்செய்கைகளில் முயலாதிருத்தலும், அறிஞர்களுக்கழகன்று என இப்பத்திரிகையில் வெளியிட முன்வந்தோம். இதுகாறும் நமது நண்பர்கள் கைசோர்விடாது நடத்தியபடி மென்மேலும் நடத்திவர உலகெலாம் நிறைந்து உண்மைப்பொருளாய் விளங்கும் இளம்பிறைசூடிய எம்பிரான் அருள்புரிவாரென்று அவரது திருவருளைச் சிந்திக்கின்றோம். சுபம்.

விசாகவிஜயம்.

ஐயா,—மாசா மேன்மைதாங்கிய கோளவன்மதேவனென்னும் கவிகள்கோமான் உங்கள் முன் புதியதெடுத்தோதற்பாலதன்றே. அனந்த பிரதிபை என்னும் பேராற்றல் பெருகி எண்சுவை ததும்ப, எண்டிசை புகழ உலாவிநிற்குங் காப்பியங்கள் கவிதா சாம்ராஜ்யத்தைப் பெற்று நிற்றலை யறியாதவர் யாவர்? அப்புலவர்கோமான் எழுதிய காப்பியங்களுள் “விசாகவிஜய” மென்னும் புத்தகம் எமக்கனுப்பப்பட்டு அதனைக்கண்ணுற்றோம். அதனப்பையுமினிமையையும் ஒருவாறெடுத்தோத முயன்றும் எம்முள்ளத்திலுதிக்குக் கருத்துக்களை வெளியிடத் தேடியுந் தென்கலைச் சொற்களப்படாக் குற்றத்தால் ஒழிந்தோமேயன்றி மற்றைய எவ்வுணர்வையும் விட்டொழித்து இக்காப்பியத்தின் இனிமையிற்றானே ஈடுபட்டு நிற்கும் மசியர்மணிகள் இதன்பெருமைச சாக்ஷியிடாதொழியார். நாவலர்காள்! “இக்காலத்துக கவிகள் அநேகர்களிலிருந்தும் காவியத்திற்கேற்ற நாயகனொருவன் இலனேயெனத் தென்னாட்டில் வழங்கும் ஓர் முதுமொழியும், சோநாட்டின் செம்மணியாய விசாகமஹாராஜன் திருவவதாரத்துடன் ஒழிந்ததுபோலும். புதியது காவியம்; புதியன்கவி; புதியவன் நாயகனெனில், நன்மலர் பொனமலர் நன்னாற்றம் பெற்று இனிமையுஞ் சற்றெய்தியது என்றவாறாயிற்று. இக்காவியம் நீடூழிகாலம்வரையில உயர்நிலைபெறக் கடவுளது கருணையைச் சந்தித்து நிற்கின்றோம். இக்காவியத்தை எமக்கனுப்பிய ம-m-m-ஸ்ரீ திருநெல்வேலி கிருஷ்ணசாமிஐயரவர்களுக்கு யாம் அகமகிழ்ந்து வந்தனமளிக்கடமைப்பட்டுள்ளோம்.

கடிதம்.

மாயாவாதத்திமிரபானு.

அனைக்கோணம் சைவசித்தாந்தியார் எழுதிய கடிதங்களுக்குவிகடதூதனிலும் பதிலெழுதினோம். அவரோடு வாதஞ்செய்வதில் பயன யாதுமில்லை. எடுத்த விஷயம் ஒன்றிருக்க வேறொன்றில் பாய்ந்துபேசுகின்றார். நாம் அதற்குக்களுக்கு அப்போதப்போது சமாதானஞ் சொலலவேண்டிவருகிறது. இவ்வாறு யாம் பேசுவதும் பயனற்றதாகிறது. இதை வாசிப்பவர்களுக்கும் மனவருத்தத்தை யுண்டாக்குமென்பதில் தடையில்லை. அதனாலேதான விகடதூதன் பத்திராதிபரும் இனிஇவ்வாதங்களுக்கு இடந்தராதுகொடோமெனக் குறிப்பாய் சுமைந்தார். அனைக்கோணம் சைவசித்தாந்தியார் வினாந்ததிலுள்ள தோஷங்களை அப்பத்திரிகைகளை வாசிப்போரே யறிவர்.

அவர் “மாயாவாதமருள்கோடிது” என்னும் தலைப்பெயரிந்து நம்மை மாயாவாதி யென்கிறார். அவர் அவ்வாறு நம்மைக் கூறவேண்டிய ஆவசியமில்லை; ஆரோபமான மாயாவாதத் திமிரத்தை நாசஞ்செய்யும் பானுவாய் நாமிருப்பதாலென்க. ப்ரம்மவித்தியா பத்திராதிபர் இதைத் தயைபுரிந்து பிரசுரிப்பாராக.

ஓர் நண்பன்.

ஒருவர் எழுதுகிறார்.

ஐயா,—ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களுக்கு வந்தனம். பவானி க்ஷேத்திரத்தில் மகாபண்டிதர் செளந்திரபாண்டிய ஓதுவாரென்பவரின் பிரபல சக்தியை லோகோபகாரமாகச் சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதாவது ஸ்ரீபரமேசுவரர் அருளைப்பெற்று அவ்வருளால் அவர் செய்யும் சக்தியைப்பாருங்கள்! மனிதர்கள் தாம் செய்யும் பூர்வகர்மானுசாரத்தால் தொடரும் அபமிருத்துவுக்குப் பரமேசுவரனை சர்வரோகநாசனாக இருக்கவேண்டுமெனவே உறுதியாகச் சொல்லக்கூடும். அநேக பண்டிதர்களால் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களைப் பிரயாசையில்லாதுஎளிதில் ஒளஷதமும் அல்லது விபூதியென்னும் அஸ்திரத்தால் சம்ஹரித்துவரும் விநோதத்தை எழுத இத்தாளிடம்பெறாது. மிகுந்த ஆச்சரியம்! அவர் தெலுங்கு, வடமொழி, தென்மொழி முதலாகிய திவ்விய கிரந்தாலுபோகர். அவ்வலிமையால்சகலரோகங்களும் சத்துருசூன்னியபீடைகளும், சகல விஷதிஷடி முதலானதும், பிசாசுமுதலானதுர ரட்சாபந்தனம, விபூதி, ஒளஷதமுதலியன்வற்றால் ரோக நிவர்த்திசெய்துகொண்டு சந்தோஷித்தெழுதிக்கொடுத்திருக்கிற நற்சாக்ஷிப்பத்திரங்கள்எவ்வளவோ அவரிடமிருக்கிறது. மேலும, சந்தானமில்லாதவர்கள்மேற்கண்ட புண்ணியசீலரிடம் ஒருமண்டலம் ரட்சை பூஜைசெய்து தாரணஞ் செய்துகொண்டபின் கர்மம், ரோகம், பிசாசம் முதலியவைகள் விலகிச் சந்தானமுண்டாகி அநேகர் சந்துஷ்டியடைந்தனர். அவரோ ஜீவகாருண்ணியர்; வெளிவேடரல்லர்; சாத்மீக குணசலியாகையால் அவரையடைந்து தங்கள் தங்கள் கஷ்டங்களை நிவர்த்திசெய்துகொள்ளல் நலமென நம்புங்கள்.

உண்மையுரைப்போன்.

ஸ்ரீ

சுபமஸ்து.

பிரசித்தம்

ஸூதசம்மிதாப் பிரகடனம்.

ஸ்காந்த மஹாபுராணத்துள்ள ஆறு சம்மிதைகளுள் ஒன்றாய் யாவற்றிலும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைதசித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புகட்டுவதாயுள்ளது இச்ஸூதசம்மிதை யென்பது அறிஞர்கள் யாவரும அறிந்தவிஷயமாம். நம் சைவசமயத்துள் எவ்விஷயங்களை அறிய விரும்பினும் இச்ஸூதசம்மிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடுத்து விளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகள் பேரன்மைதாங்கிய மஹாபாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன்பெருமை எளிதல பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரிந்ததோருரையும் ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளால் இயற்றப்பட்டது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னாட்டவர்க்கு மிக உபயோகந் தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புத்தகம் 1-ரூபா 5-க்கு விற்கப்பட்டுவருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம் தென்னாட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் வேண்டுகோளின்படி நாம் அதனைக்கிரந்த எழுத்தில் அச்சிட்டு யாவர்க்கும் உபயோகமாகும்பொருட்டு மிகச் சொற்பவிலையாகிய 2-ரூபாவுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கின்றோம்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து இதுமுதல் மூன்று மாசத்துக்குள் இதன் கிரயமாகிய ரூபா இரண்டையும் முன்பணமாக அனுப்புதல்வேண்டும். அப்படி முன்பணம் அனுப்புவோர்க்கு மீ 1-க்கு 8-பாரம்கொண்ட சஞ்சிகையாக 16 மீ வரையிலாவது அல்லது 16-மாசத்தின் பின்னர் உயர்ந்த கலிக்கோ பயிண்டு செய்து ஒரே தடவையில் புத்தகமாக்கியாவது அனுப்பப்படும். 10-க்கு 1-ம், 25-க்கு 3-ம, 50-க்கு 7-ம், 100-க்கு 15-ம், இனாமாகக் கொடுக்கப்படும்.

பணம் அனுப்புவோர் இதனடியிற்கண்ட விலாசப்படி அனுப்பி ரசீது பெற்றுக்கொள்வதோடு, தமக்கு மாசந்தோறும் சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது பயிண்டு செய்து புத்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தம் கருத்தைக் கடிதமூலமாகத்தெரிவித்தலும் வேண்டும். ஆவணி-மீ 30உ க்குள் அனுப்பப்படும் கையொப்பங்களேயன்றி அதன்மேல் வரும் கையொப்பங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

விரோதிவருஷம் வையாசி-மீ 29உ

இங்ஙனம்,
கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள்.
ப்ரம்மவித்தியா ப்ரெஸ் தலைவர், சிதம்பரம்.

[illegible]

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press.

ப்ரம்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

பிரதி இங்கிலிஷ்மீ ௱௰. ௨ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புத்தகம் - ௧.] ௧௮௮௬ - ௵ செப்டம்பர்மீ ௱௰ - ௨. [இலக்கம் - ௪.

ப்ரஹ்மவித்யா

[illegible]

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருதபாஷை [தொடர்ச்சி]

ஸ்மிருதிகள்.

இவைகளைப்பற்றிப் பலர் பலவிதமாய்ச் சொல்லியிருப்பினும், இதன் வரலாற்றைச் சற்று அறிந்தமட்டில் எழுதுவாம். ஆதியிற் பிரமதேவன் தனக்குப் பரமேசுவரனால் அநுக்கிரகிக்கப்பட்ட சகல வேதங்களையும் ஒருவாறு ஆராய்ந்து, அவற்றுள் அநேகவிடங்களிற் சொல்லப்பட்ட வருணாச்சிரமதருமங்களையெடுத்துச் சுருக்கித் தருமசாஸ்திரம் எனப்பெயர்கொடுத்து ஓர் நூல் இயற்றினர். அதுவே யுகாந்தரங்களில் நடந்தேறிவந்தது. அதுகொண்டே மச்சியபுராணத்தில் [illegible] "புராணமும், தருமசாஸ்திரமும் முதலில் அறிந்துகொண்டவர் பிரமதேவர்" என்று கூறப்பட்டுளது. இத்தருமநூலின் மூலமாகிய வேதங்களையும், மற்றைய புராணங்களையும், தருமநூற்களையும் பரமசிவன் அருளிச்செய்து, பின்பு பிரமதேவனுக்கு உபதேசித்ததாக மாபாரதம் சாந்திபருவத்திற் கூறியது எல்லோரும் காணலாம். [illegible] பின்பு சூலமேந்திய பகவான் சிறிது தியானித்துச் சர்வ சாஸ்திரங்களையும் சிருஷ்டித்தார்; அவை, சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம், வேதங்கள், மீமாஞ்சை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரங்கள் என இவை. அவற்றுள் ஒன்றாய தர்மசாஸ்திரம், இப்பொழுதுவழங்கும் தருமசாஸ்திரங்களுக்கு மூலமான பிரமதேவனியற்றிய தருமசாஸ்திரத்திற்கும் முதநூலெனக்கொள்ளற்பாலது. அதன் பின்பு அவரது அம்சமான மும்மூர்த்திகளும், ஒவ்வொரு கற்பங்களிலும் அந்நூலை வெளியிட்டு வந்தனரென்று